# R 5486 (page 190)

# "சிந்தையும் சித்தமும்"

## MIND AND WILL

ஒரு தனி நபர் புது சிருஷ்டியாக எண்ணப்படுவதற்கு முன்பே, சரீரத்தின் சித்தம் மரித்துவிட்டது. சிந்தை மற்றும் சித்தம் என்ற வார்த்தைகள் அடிக்கடி மாறிமாறி பயன்படுத்தப்பட்டாலும், இவைகளுக்கிடையே உள்ள வித்தியாசத்தை பார்க்க வேண்டியது நமது கடமையாகிறது.

மாம்ச சித்தம் உண்மையிலேயே மரிக்கிறது, நாம் ஒரு புதிய சித்தத்தை, பரிசுத்த சித்தத்தை,தேவசித்தத்தை நம் சித்தத்துக்கு பதிலாக பெறுகிறோம். அந்த சித்தம் பரிசுத்தமாயிருப்பதற்கு நிரந்தர தடை ஏற்படுத்தி, மாம்சத்தின் சித்தத்துக்கு மீண்டும் திரும்புமானால் அது, "அழிவுக்கென பின்னிட்டுத் திரும்புகிறது" என்று அப்போஸ்தலர் எச்சரிக்கிறார். சித்தம் அவ்வாறு மாறுதலடைவது, கழுவப்பட்ட பன்றி மீண்டும் சேற்றில் புரள திரும்பியதற்கொப்பாயிருக்கும் என்று அப்.பேதுரு கூறுகிறார். யார் மாம்ச சித்தத்துக்கு மனப்பூர்வமாயும் துணிகரமாயும் திரும்புகிறார்களோ, அவர்கள்,"இரண்டு தரஞ்செத்த வேரற்றுப்போன மரங்கள்" என விவரிக்கப்பட்டுள்ளது. வேறு வார்த்தைகளில் கூறுவோமானால், மாம்சத்துக்குரிய சித்தம் மறுபடியும் உயிர்ப்பிக்கப்பட்டது என்றும், ஆவியில் ஜெநிப்பிக்கப்பட்ட புதிய சித்தம் மரித்துவிட்டது என்றும் பொருளாகும்.

ஆனால் சிந்தையுடன் இது வேறுபட்டதாயிருக்கிறது. சரீரத்தின் ஒரு பகுதியே சிந்தை. சரீரமோ தன் மாம்சத்துக்குரிய பசி, நாட்டங்கள், விருப்பங்களை கொண்டிருந்து, புதிய சித்தத்தின் தீர்மானத்துக்கு எதிராக பூமிக்குரிய உரிமைகளுக்காக தொடர்ந்து கூக்குரலிடுகிறது. எனவே மாம்ச சிந்தை மரிக்கவில்லை, இல்லையென்றால், அது புதிய சித்தத்தின் ஆவிக்கு, அதாவது கிறிஸ்து இயேசுவுக்குள்ளான புதிய சிருஷ்டியின் ஆவிக்கு எதிராக கூக்குரலிடவும் போர்புரியவும் முடியாது - கலாத் 5:17.

இப்படிப்பட்ட தெளிவான வேறுபாடுகள் வேதாகமத்தில் மட்டுமே காணப்படுகின்றன. ஒருவேளை இதை ஒருவராலும் மதித்துணராவிடினும், வேதமாணவரே மதித்துணருகின்றனர். ஆகவே ஒரு தனிமனிதன் ஒரு புது சிருஷ்டியாக எண்ணப்படுவதற்கு முன்பாக,"மாம்ச சிந்தை மரித்ததாக எண்ணப்படுகிறது" என்று கூறுவது சிறந்ததாயிருக்கும்.

அப்போஸ்தலருடைய அறிக்கையும் இதே நடையிலேயே உள்ளது, "நீங்கள் பாவத்துக்கு மரித்தவர்களாயும், தேவனுக்கென பிழைத்திருக்கிறவர்களாயும் உங்களை எண்ணிக்கொள்ளுங்கள்". மீண்டுமாக நாம் வாசிக்கிறோம்; "பூமியிலுள்ள உங்கள் அவயவங்களை மரிக்கப்பண்ணுங்கள்" அதாவது, மாம்ச சிந்தை மரிக்கப் பண்ணுங்கள். உங்கள் மாம்ச சிந்தையை மரிக்கச்செய்வது அல்லது அழிப்பது என்பது, மரித்ததாக கருதப்படுகின்ற, ஆனால் நிஜமாகவே மரிக்காத பழைய சிருஷ்டிக்கெதிராக புதிய சித்தத்தின் பங்கில் ஒரு தொடர்ச்சியான போராட்டம் போராடுவதை அர்த்தப்படுத்துகிறது.

-------------------